2. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சி ஒன்றியங்கள் (3 ஆம் திருத்தச்) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளேன்.

3. தகவல் கோரல்.

(1) 'எய்ட்ஸ்' நோய் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாளேடு களில் வந்துள்ள செய்தி குறித்து.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இன்று தமிழ் நாட்டில் வெளி வந்துள்ள ஆங்கில, தமிழ் ஏடுகள், புது டில்லியில் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்துள்ள ஒரு அதிர்ச்சியான செய்தியை வெளியிட் டிருக்கின்றன. "எய்ட்ஸ்" என்கின்ற நோய் தமிழ் நாட்டிலே 6 பேர்களுக்கு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று டில்லியில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கருத்தையொட்டி பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அதற்காக தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து ஒரு விவரமான அறிக்கையை வெளியிடுவார்களா? பொது மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில், இந்த நோயிலிருந்து தப்புகின்ற வகையிலும், அதற்குத் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிக்கின்ற வகையிலும் ஒரு விவரமான அறிக்கையை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா? நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவிக்கும் முன்பு, டில்லி வட்டாரத்தில் பேசப்படுவதற்கு முன்பு, தமிழ் நாட்டில் பல நாட்களாக இருந்துவருகிற "எய்ட்ஸ்" நோய்பற்றி நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாநிலத் திற்கு இந்தப் பயங்கரமான நோய்பற்றி அறிவிக்காமல் இருந்ததற்கான காரணம் என்ன என்பதையும் நான் அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறேன்.